www.nunnarivu.com
JANUARY 2025
Price ₹ 15/-
Vol.5 Issue.4

# நீதியின் நுண்ணறிவு

NEETHIYIN NUNNARIVU

புலனாய்வு இதழ்




## 13 புதிய நகராட்சிகள் உருவாக்கம்... தமிழக அரசு வெளியிட்ட அறிவிப்பு



## மக்கள் பாதுகாப்புக்கு முக்கியத்துவம்!

திருப்பூர் புதிய போலீஸ் கமிஷனர்





## புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மாணவி

## கூட்டு பாலியல் படுகொலையா? பின்னால் இருக்கும் வலை பின்னல்கள்

# வாழ்த்துகிறோம்...









தன்னுடைய பணி நிறைவு விழாவில் தான் எழுதிய சீருடை சிற்பிகள் எனும் புத்தகத்தை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் A.K.அருன்கபிலன்IPS அவர்கள் வெளியிட நான் பெற்றுக்கொண்டேன்.

நான் 37 ஆண்டு காலம் காவல்துறையில் காவலராக உதவி ஆய்வாளராக காவல் ஆய்வாளராக காவல்துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து 31 12 2024 அன்று காவல் பணியில் இருந்து ஓய்வு பெறுகிறேன் கடைசியாக வேதாரண்யத்தில் உட்கோட்டத்தில் நான்கு முறை ஆய்வாளராகவும் காவல்துறை கண்காணிப்பாளராகவும் பணிபுரிந்து விடைபெறுகிறேன் 31 12 2024 அன்று எனக்கு தமிழக அரசு மற்றும் காவல்துறை உயர் அதிகாரிகள் உத்தரவுப்படி காவல்துறை கண்காணிப்பாளர் நாகப்பட்டினம் அவர்களின் தலைமையில் விடைபெறும் விழா சிறப்பாக நடந்தது அதன் பின்பு வேதாரண்யம் தோப்புத்துறை அம்மன் திருமண மண்டபத்தில் நான் பணிபுரிந்ததை பாராட்டி வேதாரண்யம் ஊர் பெரியவர்கள் ஊர் மக்கள் எனது குடும்பத்தினர் என்னைச் சார்ந்த நண்பர்கள் திரளாக வந்து என்னை மகிழ்வித்தனர் முக்கியமாக கூடுதல் காவல் துணை கண்காணிப்பாளர் காவல்துறை கண்காணிப்பாளர் நாகப்பட்டினம் மற்றும் காவல்துறை நண்பர்கள் ஆகியோரும் கலந்துகொண்டு என்னை பெருமைப்படுத்தினர் மேலும் பன்முக வித்தகர் பாடகர் ராகவ் மகேஷ் அவர்களின் இசை சாரல் குழுவினர் பாடல்கள் இசைக்க மதிய விருந்து அழைக்க மிகச் சிறப்பான விருந்தினை சுவைக்க நிகழ்ச்சி இனிதாக நடந்தது கடைசியாக நீதியின் நுண்ணறிவு ஆசிரியர் மரியாதைக்குரிய நண்பர் சிவகுமார் அவர்கள் குழுவினரோடு வந்து வாழ்த்தி விடை கொடுத்த நிகழ்ச்சி என் வாழ்நாளில் மறக்க மாட்டேன் ஒரு சிறிய ஒரு சிறிய கிராமத்தில் பிறந்து கல்வியில் பட்டம் பெற்று காவல்துறையில் சேர்ந்து உயர்ந்த பதவியில் வாழ்ந்து கலைத்துறையில் புகுந்து சராசரி மனிதனாய் வாழ்ந்ததற்கான அத்தாட்சியோடு விடைபெற்றேன் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைத்து உள்ளங்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.



**நன்றி வணக்கம்...**
**சி சுபாஷ் சந்திர போஸ்**

# நீதியின் நுண்ணறிவு

புலனாய்வு இதழ்



**ஆசிரியர் – வெளியீட்டாளர்**
**R.சிவகுமார்**

இணை ஆசிரியர்கள்
**J.கணேசபாண்டி,**
**A.விஜய்,**
**G.ஜெயபிரகாஷ்நாராயணன்**

துணை ஆசிரியர்கள்
**D.சிவராஜ், K.பாரதிராஜா,**
**G.சுரேந்திரன், B.காந்திநாதன்,**
**S.ராஜ்நாராயணன்**

கௌரவ ஆலோசகர்கள்
**R.வீரராகவன்** B.Sc., M.A., M.B.M., L.L.B.,
**A.கந்தசாமி** S.P.
காவல்துறை கண்காணிப்பாளர் (ஓய்வு)
Dr.K.**முருகேசன்** M.B.B.S., D.L.O.,
**மா.செல்வராஜ்**
(முன்னாள் முதல்வர் – குருநானக்கல்லூரி)
**சோம்புராஜன்**
கூடுதல்ஆணையர், தொழிலாளர்துறை (ஓய்வு)
**டாக்டர். மணிவண்ணன்** B.S.M.S.
**S.வீரப்பன்**

முதன்மை நிருபர்கள்
**M.சுப்பிரமணியன், R.சதீஷ்குமார், S.ஆனந்த்,**
**V.மாதவன், A.ராஜ்மோகன்**

நிருபர்கள்
**R.இன்பசேகரன், G.மோகன், S.சாம்எட்வின்,**
**C.சரவணன், S. சீனிவாசன், M.G.செந்தில்குமார்,**
**R.நடராஜன், S.சஞ்சய் குமார்,**
**இம்ரான்கான், J.ஜஸ்டின்டேவிஸ், A.மதிமாறன்**
புகைப்பட கலைஞர் : **விஜயகுமார்**

சட்ட ஆலோசகர்கள்
**K.M.S.செந்தில்குமார்** BSc., B.L.,
**M.சரவணன்** M.Sc., B.L.,
**A.வெங்கடேஷ்பாபு** B.Sc., B.L.,

வடிவமைப்பு : 4 மீடியா டிசைன்ஸ்



நிர்வாக அலுவலகம்:
எண். 14/88, வெங்கடேஸ்வரா நகர், 3வது மெயின்ரோடு, வேளச்சேரி, சென்னை- 42.
போன்: **9884949445, 99624 56555**
இமெயில்: **nunnarivuidhal@gmail.com**
**www.nunnarivu.com**



ALLRIGHTS RESERVED LEGAL JURISDICTION IN CHENNAI CITY COURT ONLY. NOTHING IN NEETHIYIN NUNNARIVU IS INTENDED TO DEFAME ANY PERSON. BUT EXPRESSED IN GOOD FAITH PURSUIT OF TRUTH AND PUBLIC GOOD.


# புத்தகம் நமக்கு தரும் நன்மைகள்...

**'என்னைத் தேடி வந்தால், உன்னைத் தேடி உலகம் வரும்' என்கிறது நூலகம். ஆம் அறிவை விரிவு செய் என்பதற்கிணங்க புத்தக வாசிப்பு நமது அகக்கண்களை திறந்து பரந்த வானத்தில் சிறகடித்து பறக்க துணை நிற்கிறது. படிக்க படிக்க புதிய சிந்தனைகளை வாரி வழங்கி கொண்டே இருப்பது தான் நூல்கள்.**

மரக்கோணலை சரி செய்யும் நூலை போன்று மனக்கோணலை சீர் செய்வது தான் நூல்கள். இத்தகைய சிறப்பு வாய்ந்த நூல்களை தேடிச்சென்று வாசிக்க ஒவ்வொருவரும் பழக வேண்டும். ஒருகோடி ரூபாய் கிடைத்தால் என்ன செய்வீர்கள் என்று கேட்டபோது, ஒரு நூலகம் கட்டுவேன் என்று காந்தியடிகள் சொன்னார். வேறு எந்த சுதந்திரமும் வேண்டாம், சிறையில் புத்தக வாசிப்பை மட்டும் அனுமதிக்க வேண்டும் என்றாராம் நெல்சன் மண்டேலா. நான் இன்னும் வாசிக்காத நல்ல புத்தகம் ஒன்றை வாங்கி வந்து என்னைச் சந்திப்பவனே என் தலைசிறந்த நண்பன் என்றார் ஆபிரகாம் லிங்கன்.

தான் படிக்கும் புத்தகத்தில் இன்னும் சில பக்கங்கள் பாக்கியுள்ளது என்பதால் உயிர்காக்கும் அறுவை சிகிச்சையை ஒத்திவைக்க சொன்னாராம் அறிஞர் அண்ணா. இப்படி அறிவால் உலகை ஆண்ட அறிஞர்கள் அனைவருமே புத்தக வாசிப்பை நேசித்தவர்கள். புத்தக புழுவாக இருந்தவர்கள் தான். ஒரு படைப்பாளி எத்தனையோ சிரமத்துக்கு இடையில் அர்ப்பணிப்புடன் ஒரு புத்தகத்தை உருவாக்கி தருகிறான். அதை மேலோட்டமாக கூட வாசிக்காமல் அலட்சியப்படுத்துவது நமக்கு தான் நஷ்டம். எல்லா புத்தகங்களையும் எல்லாரும் பணம் கொடுத்து வாங்க முடியாது என்பதால் தான் நூலகங்கள் அமைக்கப்பட்டன. ஆனால் நூலகம் சென்று வாசிக்கும் பழக்கமும் மக்களிடையே குறைந்து கொண்டே வருகிறது.



R.சிவகுமார்
ஆசிரியர்

# ஆயுதப்படை காவலருக்கு திருநெல்வேலி சரக காவல்துறை துணை தலைவர் பாராட்டு



கமாண்டோ பயிற்சியில் சிறப்பாக செயல்பட்டு பதக்கம் வென்ற திருநெல்வேலி மாவட்ட ஆயுதப்படை காவலருக்கு திருநெல்வேலி சரக காவல்துறை துணை தலைவர் அவர்கள் பாராட்டு.

தூத்துக்குடி மாவட்டம், வல்லநாடு கமாண்டோ பயிற்சி பள்ளியில் 14.11.2024 முதல் 28.12.2024 வரை நடைபெற்ற 56 நாட்கள் கமாண்டோ பயிற்சியில் தென் மண்டல மாவட்டங்களில் இருந்து 63 காவலர்கள் கலந்துகொண்ட இப்பயிற்சியில் திருநெல்வேலி மாவட்ட ஆயுதப்படை இரண்டாம் நிலை காவலர் ராஜு அவர்கள் ஒட்டுமொத்த போட்டிகளில் வெற்றி பெற்று பதக்கம் மற்றும் 3 கேடயங்கள் பெற்றுள்ளார்.

பின் பயிற்சி முடித்து வந்த காவலர் திரு. ராஜு என்பவரை திருநெல்வேலி சரக காவல்துறை துணை தலைவர் முனைவர். பா. மூர்த்தி., திருநெல்வேலி சரக அலுவலகத்திற்கு நேரில் அழைத்து பாராட்டுகளை தெரிவித்தார்.









04.01.2025 அன்று ஆவடி காவல் ஆணையரகத்தை சேர்ந்த 43 சிறப்பு உதவி ஆய்வாளர்கள் 9 வார பயிற்சி முடித்து உதவி ஆய்வாளாராக பதவி உயர்வு பெற்றவர்களுக்கு பயிற்சி நிறைவு விழா நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் ஆவடி காவல் ஆணையாளர் திரு. கி.சங்கர் இ.கா.ப., அவர்கள் பயிற்சி பெற்றவர்களின் வழியனுப்பும் விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

# மக்கள் பாதுகாப்புக்கு முக்கியத்துவம்!

## புதிய போலீஸ் கமிஷனர் பேட்டி



**மா** நகரில் மக்களின் பாதுகாப்பு, வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளித்து தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்," என்று திருப்பூர் போலீஸ் கமிஷனராக பொறுப்பேற்ற ராஜேந்திரன் தெரிவித்தார்.

திருப்பூர் போலீஸ் கமிஷனராக இருந்த லட்சுமி சென்னைக்கு இடமாற்றம் செய்யப்பட்டார். ராஜேந்திரன், திருப்பூர் கமிஷனராக நியமிக்கப்பட்டார். நேற்று மதியம், கமிஷனர் அலுவலகத்தில் அவர் பொறுப்பேற்ற பின், கூறியதாவது:

சட்டம்-ஒழுங்கைபேணிகாப்பது,குற்றங்களை தடுப்பது, நடந்த குற்றங்களை கண்டறிவது, போக்குவரத்து நெரிசல், விபத்துகளை தடுப்பது, குறைப்பது உள்ளிட்டவைக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு, கவனம் செலுத்தப்படும். மக்கள் எந்த நேரத்திலும் தொடர்பு கொள்ளலாம். தங்கள் புகார்களை தெரிவிக்கலாம்.

இன்றைய காலகட்டத்தில் சைபர் மோசடி பெருகி விட்டது. மக்கள் ஏமாறாமல் இருக்க தேவையான விழிப்புணர்வு செய்யப்படும். வழக்கமான குற்றங்களில் இருந்து, இது மாறுபட்ட குற்றம்.

இதில் தொடர்புடையவர்களை பிடிக்க நடவடிக்கை எடுக்கப்படும். போக்குவரத்து விதிகளை மதிக்க, நெரிசலை தவிர்க்க தேவையான இடங்களை ஆய்வு செய்து, நகரின் வளர்ச்சிக்கு நடவடிக்கை எடுக்கப்படும். சட்டவிரோத செயல்கள் தொடர்பாக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். வங்கதேசத்தினர் ஊடுருவல் தொடர்பாக கண்காணிக்கப்படும். நிலுவை வழக்குகள் குறித்து ஆலோசனை செய்து, கண்டுபிடிக்கப்படும். மாநகரத்துக்கு தேவையான விஷயங்கள் உயரதிகாரிகளிடம் தெரியப்படுத்தப்பட்டு கேட்டு பெறப்படும்.

இவ்வாறு, அவர் கூறினார்.

ராஜேந்திரன் கடந்த, 1998ம் ஆண்டு குரூப்-1 தேர்வு மூலம் போலீஸ்துறைக்கு வந்தார். பயிற்சி முடித்த பின், தர்மபுரி மாவட்டம் தேன்கனி கோட்டையில் டி.எஸ்பி.,யாக பயணத்தைதுவங்கினார். மதுரை, சாத்துார், ஓமலுார், முதல்வர் பாதுகாப்பு பிரிவில் இருந்தார். விருதுநகர் ஏ.டி.எஸ்.பி., பின் 2006ம் ஆண்டு எஸ்.பி.,யாக பதவி உயர்வு பெற்று மதுரை, கன்னியாகுமரி, கோவையில் துணை கமிஷனராக இருந்தார். 12 ஆண்டுகள் சென்னையில் பல பொறுப்புகளில் பணியாற்றினார். மதுரை டி.ஐ.ஜி., நெல்லை கமிஷனர், ஆவடி ஐ.ஜி.,யாக பணியாற்றினார். கொங்கு மண்டலத்தில் கோவை, ஓமலுாரில் பணியாற்றிய பின், நீண்ட காலம் கழித்து, மூன்றாவது முறையாக இப்பகுதியில் பணியாற்ற உள்ளார்.

பொறுப்பேற்றவுடன், துணை கமிஷனர், உதவி கமிஷனர், இன்ஸ்பெக்டர் உட்பட பலரும் அவரை சந்தித்து அறிமுகமாகினர். கமிஷனரை சந்திக்க சென்ற போது, பூங்கொத்து, எலுமிச்சை போன்றவற்றை வாங்கி சென்றவர்களிடம் 'இதை இனி பின்பற்ற வேண்டாம்; சாதாரணமாக வந்து சந்தித்தால் போதும்' என்று அறிவுறுத்தினார்.



# மதுரையில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு














"சாலை பாதுகாப்பு மாதம்-2025" முன்னிட்டு மதுரை தமுக்கம் சந்திப்பில் பொதுமக்களிடையே சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வண்ணம் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு இருசக்கர வாகன பேரணியை மாநகர காவல் ஆணையர் அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

இருசக்கர வாகன பேரணியானது தமுக்கம் மைதானம் தமிழன்னை சிலையில் இருந்து துவங்கி வடக்குமாசி வீதி சந்திப்பில் நிறைவடைந்தது. இருசக்கர வாகன பேரணியில் சட்டம் & ஒழுங்கு, போக்குவரத்து, ஆயுதப்படை, ஊர் காவல்படை காவலர்கள் சுமார் 200 பேர் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் போக்குவரத்து துணை ஆணையர், காவல் கூடுதல் துணை ஆணையர், போக்குவரத்து உதவி ஆணையர்கள் மற்றும் காவல் ஆய்வாளர்கள் கலந்துகொண்டனர். மேலும் தமுக்கம் சந்திப்பில் இருசக்கர வாகனங்களில் தலைக்கவசம் அணிந்து சென்ற பொதுமக்களுக்கு இனிப்புகள் மற்றும் விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய துண்டு பிரசுரங்களை காவல் ஆணையர் அவர்கள் வழங்கினார்.

# Z System Intelligent Controls Private Limited

system

*Intelligence in Automation*

We are prominent Industrial automation solution provider having strong knowledge and expertise in handling automation products like PLC, HMI/SCADA, VFD, PID controllers, Field transmitter, Switches, Sensors etc.

We are conversant in handling IOT, VR ,AR & ER applications.

We offer complete sales, Engineering & Application development and Commissioning support services across the globe.

## Our Principles & Products

SIEMENS | azbil | TURCK | AR, VR & ER Developement




PLC,HMI, Scada, VFD, RFID, MindSphere

Temperature Controller, Recorders, Switch, Sensors

Sensors, Connectivity. Interface technology Analysers

Solutions for IOT and Industrial 4.0

## Our Service



Power | Water & Waste water | Metro | SPM | Cement | Metal | Smart World

## Our Clients

AIS | MELSS | KV | Rane | Subros | TATA | SHS | sietec | ALSTRUT | INSIGHT ENGINEERING | interface | MAHA | MXHUB | NIOT | Nein Automation | BGR ENERGY

## Contact Address

Plot No.36
27th Street
Thillai Ganga Nagar
Nanganallur
Chennai-600061
Website : www.zsystem.in

Plot No.54
44th Street
Thillai Ganga Nagar
Nanganallur
Chennai-600061
Phone : 098404 53136

/zsystem.in
/zsystem_in
/z-system-intelligent-controls-pvt-ltd

# சென்னை போக்குவரத்து காவலர்களுக்கு

# Noise Cancellation Earphone இயந்திரங்கள்

சென்னை போக்குவரத்து காவலர்களுக்கு,போக்குவரத்திலிருந்து வரும் அதிக ஒலி அலைகளை தடுக்கும் *Noise Cancellation Earphone* இயந்திரங்கள் வழங்கப்பட்டது

சென்னை பெருநகர போக்குவரத்து காவல்துறையினர் தினமும் 8 மணிநேரம் போக்குவரத்து சந்திப்புகளில் அயராது பணிபுரிந்து வருகின்றனர், இப்போக்குவரத்தினால் ஏற்படும் இடைவிடாத சத்தமானது 90 முதல் 150 dB வரையில் இருப்பதாக தெரியவருகிறது. இத்தகைய அதிக இரைச்சல் அளவுகளை கொண்ட ஒலி அலைகள் நீண்ட நேரம் வெளிப்படுத்துவதால், இப்போக்குவரத்து சந்திப்புகளில் பணியில் இருக்கும் போக்குவரத்து காவலர்களின் ஆரோக்கியத்தை பாதிப்பது மட்டுமல்லாமல் மன அழுத்தத்தையும் அதிகரிக்கிறது, இதனால் பொதுமக்களுடன் திறம்பட பணியில் ஈடுபடும் திறனைத் தடுக்கிறது.



இந்த நெருக்கடியான சிக்கலைத் தவிர்க்க, சென்னை பெருநகர போக்குவரத்துக் காவல் துறை பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட காது பிளக்குகள் மற்றும் சத்தத்தைக் குறைக்கும் கருவிகளை அறிமுகப்படுத்தி சோதனையைத் தொடங்கியுள்ளது. F-3 நுங்கம்பாக்கம் போக்குவரத்து காவல் நிலையத்தைச் சேர்ந்த 20 காவல் அதிகாரிகளுக்கு ASTRA உருவாக்கிய அமெரிக்கன் ஸ்டார்கியில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட தொழில்நுட்பத்துடன் கூடிய தனிப்பயன் இயர்ப்ளக்குகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த இயர்ப்ளக்குகள் இரைச்சல் அளவை 25 % வரை குறைக்கின்றன மற்றும் மேம்பட்ட அம்சங்களுடன் இருக்கின்ற அவைகள்:

போக்குவரத்திலிருந்து வரும் அதிக ஒலி அலைகளை தடுக்கப்படுதல், அதிக



இரைச்சல் அளவினை குறைத்தல்.

**"உரையாடல் தெளிவாக கேட்பதற்காக, தேவையற்ற சத்தத்தைத் தடுக்கிறது. நீண்ட பணி நேரங்களில் இந்த ஒலி அலைகளை சொகுசாக உணருகின்றன தனிப்பயன்பாட்டின் வசதிக்காக தனி தனியாக பொருத்தப்பட்டுள்ளது".**

இந்தியாவில் முதல் முறையாக சென்னை பெருநகர போக்குவரத்து காவல்துறையினர் செவிப்புலன் பாதுகாப்பின் முக்கியத்துவத்தை உணர்ந்து, தனது போக்குவரத்துப் பணியாளர்களுக்கு ஒலியை இரத்து செய்யும் ஹெட்ஃபோன்களை வழங்குவதில் முதல் மாநிலமாக உள்ளது. இந்த சாதனங்கள் சுற்றுச்சூழல் இரைச்சலைக் கனிசமாக குறைக்கின்றன. அதிக இரைச்சல் நிலைகளில் சிறந்த கவனம் செலுத்துவதிலும் மற்றும் செவிப்புலன் பாதுகாப்பையும் உறுதி செய்கின்றன.

R. சுதாகர், I.P.S., கூடுதல் காவல் ஆணையர் (போக்குவரத்து), உடன் D.மகேஷ் குமார், IPS, இணை ஆணையாளர் (வடக்கு( திரு.V.பாஸ்கரன், துணை ஆணையாளர் (போக்குவரத்து/கிழக்கு) திரு.Kபாஸ்கரன், உதவி ஆணையாளர் (போக்குவரத்து திட்டமிடல்), செவிப்புலன் தீர்வுகளில் நிபுணரான ASTRA ஹியரிங் கேரின் மருத்துவ ஆதரவுடன், F-3 நுங்கம்பாக்கம் போக்குவரத்து காவல் நிலையத்தின் 20 அதிகாரிகளுக்கு ஒலியை ரத்து செய்யும் ஹெட்ஃபோன்களை வழங்கி, இந்த புதிய முயற்சியைத் தொடங்கி வைத்தார். போக்குவரத்து அதிகாரிகளின் நல்வாழ்வைப் பாதுகாப்பதில் குறிப்பிடத்தக்க படியாகவும், வரும் நாட்களில் அனைத்து போக்குவரத்து காவல் பணியாளர்களுக்கும் ஹெட்ஃபோன்கள் வழங்குவதை விரிவுபடுத்துவதற்கான திட்டத்தை மேற்கொண்டு வருகின்றன.

# தஞ்சை சரக காவல்துறை துணைத்தலைவர் அதிரடி



தஞ்சை சரகத்தில் போதைப்பொருட்களுக்கு எதிராக நடத்திய அதிரடி சோதனையில் தஞ்சாவூர், திருவாரூர்,மயிலாடுதுறை மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களிலிருந்து இதுவரை பறிமுதல் செய்யப்பட்ட 589.706 கிலோ போதைப்பொருட்களை (கஞ்சா) நீதிமன்ற உத்தரவு பெற்று தஞ்சை சரக காவல்துறை துணைத்தலைவர் திரு.ஜியாவுல் ஹக் இ.கா.ப., அவர்கள் தலைமையில் திருவையாறு உட்கோட்டம் செங்கிப்பட்டி காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட Medi Care Enviro System என்ற நிறுவனத்தில் போதைப்பொருட்களை தீயிட்டு அழிக்கும் நிகழ்வானது நடைபெற்றது.

# தஞ்சையில் புதிய எஸ்.பி பதவியேற்பு



தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் உள்ள ஐ.பி.எஸ் அதிகாரிகளுக்கு பணியிட மாற்றம் வழங்கி தமிழக அரசு உத்தரவிட்டது. அதன்படி தஞ்சை மாவட்டத்தின் புதிய காவல் கண்காணிப்பாளராக ஆர்.ராஜாராம் நியமனம் செய்யப்பட்டார். இந்நிலையில் (ஜன.4) சனிக்கிழமை தஞ்சை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் ஆர். ராஜாராம் பொறுப்பேற்றுக்கொண்டார். அவருக்கு பல்வேறு தரப்பினர் வாழ்த்துக்களை தெரிவித்து வருகின்றனர்.

**யார் இவர்?**

கடந்த அதிமுக ஆட்சியில் சிலை கடத்தல் தடுப்பு மற்றும் பாதுகாப்பு பிரிவில் டிஎஸ்பி. ஏடிஎஸ்பியாக பணியாற்றியவர்.

கடலூர் மாவட்டம் சிதம்பரம் டிஎஸ்பியாக இருந்தபோது அதிமுக ஆட்சியில் அதிமுக பிரமுகர்கள் (தற்போது எம்.எல்.ஏ.வாக இருக்கும்) பாண்டியன், மற்றும் அதிமுக நிர்வாகி சுந்தர் ஆகியோர் மீது குற்ற வழக்குகள் பதிவு செய்தவர். நேர்மையானவர் என காவல் துறையினரால் பேசக்கூடியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# புதுகை மாவட்ட எஸ்.பி. ஆக அபிஷேக் குப்தா நியமனம்



புதுக்கோட்டை மாவட்ட காவல் கண்காணிப்பாளராக பணியாற்றிவந்த வந்திதா பாண்டே திண்டுக்கல் டிஐஜியாக பதவி உயர்வு பெற்றுள்ள நிலையில் புதுக்கோட்டை மாவட்டத்தின் புதிய காவல் கண்காணிப்பாளராக அபிஷேக் குப்தா நியமனம் செய்யப்பட்டுள்ளார். புதுகை மாவட்டத்தின் புதிய காவல் கண்காணிப்பாளராக அபிஷேக்குப்தா விரைவில் பதவியேற்க உள்ளார்.




**தூத்துக்குடி மாவட்டம் ஆத்தூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் தங்கள் உயிரை பணையம் வைத்து ஒரு கொலையை தடுத்து தாக்குதலில் ஈடுபட்ட 2 எதிரிகளை சம்பவ இடத்திலேயே பிடித்து, காயம்பட்டவரை மீட்டு மருத்துவமனையில் சேர்த்த ஆத்தூர் காவல் நிலைய போலீசாரின் துணிச்சலையும் துரித நடவடிக்கையும் தமிழ்நாடு காவல்துறை தலைமை இயக்குநர்/படைத்தலைவர் அவர்கள் இன்று (03.01.2025) சென்னை காவல்துறை தலைமை இயக்குநர் அலுவலகத்தில் வைத்து பாராட்டுச் சான்றிதழ் மற்றும் வெகுமதி வழங்கி பாராட்டினார்.**

## கோவை கமிஷனர் பணியிட மாற்றம்

# புதிய கமிஷனராக சரவண சுந்தர் நியமனம்

கோவை மாநகர போலீஸ் கமிஷனராக பணியாற்றி வந்தபாலகிருஷ்ணன்சென்னைக்கு இடமாற்றம் செய்யப்பட்டார். கோவை மாநகர புதிய போலீஸ் கமிஷனராக சரவண சுந்தர் நியமனம் செய்யப்பட்டார்.



சரவண சுந்தர் IPS

தமிழக போலீஸ் உயர் அதிகாரிகள் 56 பேர் பணியிட மாற்றம் செய்து உத்தரவு பிறபிக்கப்பட்டுள்ளது. அதில், கோவை, திருப்பூர் கமிஷனர்கள், டி.ஐ.ஜி., துணை கமிஷனர்கள் இடமாற்றம்செய்யப்பட்டுள்ளனர்.

அதன்படி, கோவை மாவட்ட கமிஷனராக பணியாற்றி வந்த பாலகிருஷ்ணன் சென்னை டி.ஜி.பி., அலுவலக நிர்வாக பிரிவு ஐ.ஜி.,யாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவருக்கு பதிலாக, கோவை டி.ஐ.ஜி.,யாக பணியாற்றி வந்த சரவண சுந்தர் பதவி உயர்வு பெற்று மாநகர போலீஸ் கமிஷனராக நியமிக்கப்பட்டுள்ளார்.

கோவை டி.ஐ.ஜி.,யாக ஈரோடு மாவட்ட சிறப்பு அதிரடிப்படை எஸ்.பி.,யாக இருந்த சசி மோகன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேபோல், மாநகர துணை கமிஷனராக (வடக்கு) பணியாற்றி வந்த ஸ்டாலின் கன்னியாகுமரி மாவட்ட எஸ்.பி.,யாக மாற்றப்பட்டுள்ளார். அவரது பதவிக்கு சென்னை லஞ்ச ஒழிப்புத்துறை எஸ்.பி.,யாக பணியாற்றி வந்த தேவநாதன் நியமனம் செய்யப்பட்டுள்ளார். தெற்கு துணை கமிஷனர் சரவண குமார் சென்னை பொருளாதார குற்றப்பிரிவு எஸ்.பி.,யாக மாற்றப்பட்டுள்ளார்.




▶ தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் சென்னை, எழும்பூர் அரசு அருங்காட்சியகக் கலையரங்கில் நடைபெற்ற சிந்துவெளிப் பண்பாட்டுக் கண்டுபிடிப்பு நூற்றாண்டு நிறைவு பன்னாட்டுக் கருத்தரங்கு தொடக்க விழாவில், "சிந்துவெளி வரிவடிவங்களும் தமிழ்நாட்டுக் குறியீடுகளும் - ஒரு வடிவவியல் ஆய்வு" நூலினை வெளியிட்டார். இந்நிகழ்வின்போது, மாண்புமிகு நிதி மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், இ.ஆ.ப., நிதித்துறை முதன்மைச் செயலாளர் மற்றும் தொல்லியல் துறை ஆணையர் (மு.கூ.பொ.) த. உதயச்சந்திரன், இ.ஆ.ப., சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி. சந்தரமோகன், இ.ஆ.ப., தொல்லியல் ஆராய்ச்சி வல்லுநர்கள் கிரெக் ஜாமிசன், கா. ராஜன், நயன்ஜோத் லஹிரி, ஆர். பாலகிருஷ்ணன், டோனி ஜோசப் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

# மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி மாநிலச் செயலாளர் பொறுப்பேற்ற பெ.சண்முகத்திற்கு வாழ்த்துகள்

இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி (மார்க்சிஸ்ட்), தமிழ்நாடு 24-வது மாநில மாநாட்டின் நிறைவாக 81 உறுப்பினர்கள் கொண்ட மாநிலக் குழுவும், 13 உறுப்பினர்கள் கொண்ட செயற்குழுவும் தேர்வு செய்யப்பட்டு மாநிலச் செயலாளராக தோழர் பெ.சண்முகம் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.



தோழர் பெ.சண்முகம் மாணவப் பருவத்தில் இருந்தே அமைப்பில் இணைந்து செயல்பட்டு வருபவர். தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாநிலப் பொதுச் செயலாளர் பொறுப்பில் நீண்ட காலமாக செயல்பட்டு வந்தவர். பயிர் வாரியாக, பாசன வாரியாக விவசாயிகள் அமைப்புகள் செயல்பட்டு வரும் சூழலில் கூட்டமைப்பை உருவாக்கி செயல்பட வேண்டும் என்பதில் முனைப்பு காட்டி செயல்பட்டு வருபவர். ஆதிவாசிகள், பழங்குடி மக்கள் நலனுக்காக தமிழ்நாடு மலைவாழ் மக்கள் சங்கத்திலும் பங்கேற்று செயல்பட்டவர். வாச்சாத்தி பகுதியில் பழங்குடி மக்கள் ஆளும் வர்க்கமும், அதிகார வர்க்கமும் அரங்கேற்றிய அடக்குமுறைக்கு எதிராக போராடுவதில் அப்பகுதி மக்களை அணிதிரட்டி வழிநடத்தியவர். சட்டப்போராட்டம் நடத்தி வெற்றி கண்டதில் முக்கிய பங்களிப்பு செலுத்தியவர்.

அரசியல் தளத்திலும் இடைவிடாமல் இயங்கி வரும் தோழர் பெ.சண்முகம் இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி (மார்க்சிஸ்ட்) மாநிலச் செயலாளர் பொறுப்புக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார். இடதுசாரி, ஜனநாயக, மதச்சார்பற்ற, சமூகநீதி ஜனநாயக சக்திகளை ஒற்றுமை உருவாக்குவதில், அவர் மேலும், மேலும் வெற்றி பெற வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.

# சென்னை மாநகர பேருந்துகளில் ஸ்மார்ட் அட்டை வசதி அறிமுகம்

சென்னையில் வசிக்கும் பொது மக்கள் மின்சார ரெயில், மாநகர பேருந்து மற்றும் மெட்ரோ ரெயில் ஆகிய போக்குவரத்து சேவைகளை பயன்படுத்தி வருகின்றனர். இந்த மூன்று போக்குவரத்து சேவைகளுக்கும் ஒரே பயணச்சீட்டை பயன்படுத்தும் முறையை கொண்டு வர தமிழக அரசு திட்டமிட்டுள்ளது.



ஏற்கனவே 'சிங்கார சென்னை ஸ்மார்ட் அட்டை திட்டம்' மெட்ரோ ரெயில் சேவைக்கு மட்டும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அடுத்தகட்டமாக சென்னை மாநகர பேருந்துகளிலும் ஸ்மார்ட் அட்டை வசதி அறிமுகம்செய்யப்பட உள்ளது.

இதன்படி தமிழக போக்குவரத்து துறை அமைச்சர் சிவசங்கர், பல்லவன் பணிமனையில் மாநகர பேருந்துகளில் ஸ்மார்ட் அட்டை பயன்படுத்தும் திட்டத்தை தொடங்கி வைக்கிறார். தொடர்ந்து, மின்சார ரெயில்களிலும் ஸ்மார்ட் அட்டை வசதியை பயன்படுத்துவது தொடர்பாக பேச்சுவார்த்தை நடைபெறுவதாக தகவல் வெளியாகியுள்ளது.


## தமிழக பள்ளி பாட புத்தகத்தில் நல்லகண்ணு வரலாறு

### அமைச்சர் அன்பில் மகேஸ் விளக்கம்



தமிழக பள்ளி பாடப் புத்தகத்தில் நல்லகண்ணுவின் வரலாற்றை இணைப்பது குறித்து முதல்வரின் ஆலோசனை பெற்று முடிவு செய்யப்படும் என்று அமைச்சர் அன்பில் மகேஸ் தெரிவித்தார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் ஆர்.நல்லகண்ணுவின் நூற்றாண்டு விழா, சென்னையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் கலந்துகொண்ட நடிகர் விஜய்சேதுபதி, நல்லகண்ணுவின் வாழ்க்கை வரலாற்றை பள்ளி பாடப் புத்தகங்களில் தமிழக அரசு சேர்க்க வேண்டும் என கோரிக்கை விடுத்திருந்தார். இதே கோரிக்கையை சமூக வலைதளங்கள் மற்றும் ஊடகங்களிலும் பல்வேறு தரப்பினர் வலியுறுத்தி வந்தனர்.



இந்நிலையில், நல்லகண்ணுவின் வரலாற்றை பாடநூலில் இணைப்பது குறித்து பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி விளக்கம் அளித்துள்ளார். இதுகுறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்ட பதிவில், 'விடுதலைப் போராட்ட வீரர் போற்றுதலுக்குரிய நல்லகண்ணுவின் வாழ்க்கை வரலாற்றை பள்ளி மாணவர்கள் அறிந்துகொள்ளும் விதமாக அவரின் வாழ்க்கை குறிப்பை பாடப் புத்தகத்தில் இணைப்பது குறித்து முதல்வரின் ஆலோசனை பெற்று முடிவு செய்யப்படும்' என்று தெரிவித்துள்ளார்.

# கடலூரில் மாவட்ட காவல் கண்காணிப்பாளராக எஸ்.ஜெயகுமார் ஐபிஎஸ் பதவியேற்பு!



கடலூர் புதிய மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எஸ்.ஜெயகுமார் ஐபிஎஸ் அவர்கள் கடலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் பதவியேற்றுக்கொண்டார்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்த கடலூர் எஸ்பி

கடலூர் மாவட்டத்தில் போதைப் பழக்கத்தை முற்றிலுமாக ஒழிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். பொதுமக்கள் தங்களது பாதிப்புகளையும் குறைகளையும் 78454 58575 என்ற தொலைபேசி எண்ணில் எப்போது வேண்டுமானாலும் அழைத்து கூறலாம் என கூறியுள்ளார்.



# திருச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளராக எஸ்.செல்வநாகரத்தினம் நியமனம்

திருச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளராக இருந்த வி.வருண் குமார் திருச்சி சரக டிஐஜியாக பதவி உயர்வு பெற்றதை தொடர்ந்து புதிய திருச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளராக எஸ். செல்வநாகரத்தினம் நியமனம் செய்து தமிழ்நாடு அரசு உள்துறை செயலாளர் தீரஜ் குமார் உத்தரவு பிறப்பித்துள்ளார்.


SS AQUA
TECHNOLOGIES
SWIMMING POOL, JACUZZI & STEAM,
FOUNTAINS, LANDSCAPING & IRRIGATION
The pool gives good vibes
+ 91 96264 34377
www.ssaquatechnologies.com


SODEX
Floor Cleaner
Toilet Cleaner
Liquid Laundry Detergent
Fabric Softener
SODEX
Clean & Care.
Manufactured & Marketed By:
ECOGUARD LABS
Plot # 14, Rojambal Nagar Kanna puram, Mugaglivakkam Chennai 600125
Contact: 95000 76229 / 95000 76411
பொருளோ தரம்
வீட்டிற்க்கோ சுகாதாரம்!!

# 13 புதிய நகராட்சிகள் உருவாக்கம்...

## தமிழக அரசு வெளியிட்ட அறிவிப்பு

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் 13 நகராட்சிகள் உருவாக்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

இது குறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், ‘தமிழ்நாடு நகரமயமாதலில் இந்தியாவில் முன்னோடி மாநிலமாக உள்ளது. 2011 மக்கள்தொகைகணக்கெடுப்பின்படி, நகர்ப்புற மக்கள் தொகை 48.45 சதவீதமாகவும், தற்போது நகர்ப்புறங்களில் வாழும் மக்கள் தொகை சதவீதம் மேலும் உயர்ந்துள்ளது. எனவே, மாநிலத்தின் மிக வேகமான நகரமயமாக்கலை கருத்திற்கொண்டு, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளை மறுசீரமைக்க வேண்டியதன் அவசியம் எழுகின்றது. மாநகராட்சிகள், நகராட்சிகள் போன்ற பெரியளவிலான நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளைச் சுற்றி அமைந்துள்ள ஊராட்சிகள், பேரூராட்சிகள் போன்றவை நகரங்களின், பெருநகரங்களின் நுழைவாயிலாக அமைந்துள்ளதுடன், உள்ளாட்சி அமைப்புகளுக்கு வருவாய் ஈட்டித் தருகின்ற பன்னாட்டு நிறுவனங்கள் உள்ளிட்ட பெருநிறுவனங்கள், தொழிற்சாலைகள் பலவும் இவற்றில் அமைந்துள்ளன. இப்பெருநிறுவனங்கள், தொழிற்சாலைகளில் பணிபுரியும் பணியாளர்கள் ஏராளமானோர் அருகிலுள்ள நகர்ப்புற பகுதிகளிலும், அதனைச் சுற்றியுள்ள ஊராட்சிகளிலும் குடியிருந்து வருகின்றனர்.




மேற்கண்ட பகுதிகளில் மக்களுக்கு தேவையான அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் செய்வதற்கும், திட்டமிட்ட வளர்ச்சிக்கும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் மறுசீரமைப்பு அவசியமாகிறது. இதன் மூலம் தொடர்புடைய பகுதிகளில் குடியிருக்கும்மக்களுக்குமிகவும் பயனுள்ளதாக அமையும்.

மேலும், மாநகராட்சி, நகராட்சி,பேரூராட்சிகளின் எல்லைகளை சுற்றி அமைந்துள்ள பெரும்பாலான ஊரகப்பகுதிகள் நகர்ப்புர பகுதிகளுக்கு சமமாக வளர்ந்து வருகின்றன. எனவே நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளை சுற்றி அமைந்துள்ள பகுதிகளுக்கும். நகர்ப்புரங்களுக்கு இணையான வகையில் சாலைகள், குடிநீர், திடக்கழிவு மேலாண்மை, திரவக்கழிவு மேலாண்மை,

பொது/சமுதாய பயன்பாட்டிற்கான நவீன கழிப்பிடங்கள், பாதாளச் சாக்கடை 2 கட்டமைப்பு, ஆற்றல்மிகு தெருவிளக்குகள் போன்ற மக்களுக்கான இன்றியமையாத அடிப்படை வசதிகளை விரிவுப்படுத்த வேண்டியது அவசியமாகிறது. இவற்றோடு, வேகமாக நகரமயமாகிவரும்/வளச்சியடைந்துவரும் பெரும்பாலான சிறிய உள்ளாட்சி அமைப்புகளால் மக்களுக்கு தேவையான அடிப்படை மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கான நிதி மற்றும் இடப்பற்றாக்குறை மற்றும் உட்கட்டமைப்பு வசதி திட்டங்களை நிறைவேற்றுதல் உள்ளிட்ட மக்களுக்கான அடிப்படை வசதிப் பணிகள்/சேவைகளுக்கான விரைவான, திறம்பட்ட செயலாக்கத்திற்கான பொறியாளர்கள் உள்ளிட்ட தேவையான பணியமைப்பு குறைந்த அளவிலேயே உள்ளது போன்றவற்றை களையவும் உள்ளாட்சி அமைப்புகளின் மறுசீரமைப்பு அவசியமாகிறது.



இதன்மூலம், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுடன் இணைக்கப்படும் பகுதிகள் உள்ளிட்ட அனைத்து பகுதிகளிலும் குடியிருக்கும் பொதுமக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வதுடன், அடிப்படை வசதிகள், கட்டமைப்பு மேம்பாடு, மேம்படுத்தப்பட்ட சுகாதாரம் மற்றும் மருத்துவ வசதிகளும் மக்களுக்கு கிடைக்க ஏதுவாகும். இம்மேம்பாட்டினால், பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் புதிய தொழிலகங்கள் ஏற்படவும், வேலைவாய்ப்பு உருவாகவும், வருவாய் பெருகவும்,அனைத்துதரப்புவளர்ச்சிக்கும் ஏதுவாகும். அரசு, நகரமயமாக்கலின் சவால்களை எதிர்கொள்ளும் வகையில், நகர்ப்புறத்தினை ஒட்டியுள்ள உள்ளாட்சி அமைப்புகளின் நகரமயமாக்கலின் தன்மையினை பொறுத்து, கிராம ஊராட்சிகளை மாநகராட்சி மற்றும் நகராட்சிகளுடன் இணைத்தும், பேரூராட்சிகளை நகராட்சிகளாகவும், நகராட்சிகளை மாநகராட்சிகளாகவும் தரம் உயர்த்துதல்/மறுசீரமைப்பு நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

இதன்படி, கடந்த 2021 ஆம் ஆண்டு 6 புதிய மாநகராட்சிகள் மற்றும் 28 நகராட்சிகள் உருவாக்கப்பட்டுள்ளன. அதே போன்று, 10.08.2024 அன்று திருவண்ணாமலை, நாமக்கல், காரைக்குடி மற்றும் புதுக்கோட்டை ஆகிய 4 மாநகராட்சிகள் அருகிலுள்ள 2 பேரூராட்சிகள் மற்றும் 46 ஊராட்சிகளை இணைத்து, அனைத்து சட்ட நடைமுறைகளை பின்பற்றி மாநகராட்சிகளாக அமைத்துருவாக்கியுள்ளது. மேலும், 12.08.2024 அன்று மாமல்லபுரம், ஸ்ரீபெரும்புதூர் மற்றும் திருவையாறு ஆகிய பேரூராட்சிகளை நகராட்சியாக அறிவித்து அமைத்துருவாக்க அரசாணைகள் உத்தேசமுடிவினை வெளியிடப்பட்டுள்ளன. இந்நிலையில், அரசு, நகரமயமாக்குதலின் வீச்சு. நிர்வாகத் தேவைகள், மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை திறம்படவும், முழுஅளவிலும் வழங்குதல் (*comprehensive manner*), உள்ளாட்சிப் பகுதிகளின் எதிர்கால வளர்ச்சிக்கான தேவைகள் ஆகியவற்றை கருத்திற்கொண்டு, தகுதியான மேலும் பல்வேறு உள்ளாட்சி அமைப்புகளின் மறுசீரமைப்பை மேற்கொள்வதென முடிவு செய்துள்ளது.

தற்போது, 28 மாவட்டங்களில் உள்ள கிராம ஊராட்சிகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் பதவிக்காலம் வரும் 05.01.2025ஆம் தேதியன்று நிறைவடைகிறது. இந்த

மாவட்டங்களில் உள்ள நகர்ப்புரத்தன்மை வாய்ந்த ஊராட்சிகளை அருகிலுள்ள மாநகராட்சிகள், நகராட்சிகளுடன் இணைக்கவும். பேரூராட்சிகள் மற்றும் கிராம ஊராட்சிகளை இணைத்து நகராட்சியாக அமைத்துருவாக்கம் செய்திடவும் உள்ளாட்சி அமைப்புகளின் மறுசீரமைப்பு தொடர்பான உயர்நிலைக்குழு, மாவட்ட ஆட்சியர்களுடன் மேற்கொண்ட தொடர் ஆலோசனைகளின் அடிப்படையில், உரிய செயற்குறிப்புகள் பெறப்பட்டுள்ளன. அரசு, இச்செயற்குறிப்புகளை பரிசீலித்து, பெருநகர சென்னை மாநகராட்சி, மதுரை, திருச்சிராப்பள்ளி உள்ளிட்ட 16 மாநகராட்சிகளுடன், 4 நகராட்சிகள், 5 பேரூராட்சிகள் மற்றும் 149 ஊராட்சிகளை இணைக்கவும், திருவாரூர், திருவள்ளூர், சிதம்பரம் உள்ளிட்ட 41 நகராட்சிகளுடன் 147 ஊராட்சிகள் மற்றும் 1 பேரூராட்சியை இணைக்கவும், பேரூராட்சிகளுடன் ஊராட்சிகளை இணைத்தும், தனித்தும் கன்னியாகுமரி. அரூர், பெருந்துறை உள்ளிட்ட புதிதாக 13 நகராட்சிகளை அமைத்துருவாக்கவும், கிராம ஊராட்சிகளை இணைத்து மற்றும் தனியாகவும் ஏற்காடு, காளையார்கோவில், திருமயம் உள்ளிட்ட புதிதாக 25 பேரூராட்சிகளை அமைத்துருவாக்கவும், 29 கிராம ஊராட்சிகளை 25 பேரூராட்சிகளுடன் இணைக்கவும் உத்தேச முடிவினை மேற்கொண்டுள்ளது. இது தொடர்பாக தக்க சட்டவகைமுறைகளின் கீழ் ஆணைகள் வெளியிடப்பட்டு, உரிய நடைமுறைகள் தொடங்கப்பட்டுள்ளன.


இந்நடவடிக்கையின் மூலம் பொதுமக்களுக்கு தேவையான தரமான அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை அளித்திடும் நோக்கத்தை சிறப்பான முறையில் எய்திடும் வகையில், தொடர்ச்சியாக அமைந்துள்ள பகுதிகளை *(contiguous areas)* ஒருங்கிணைத்து, நிதி ஆதாரங்கள் உள்ளிட்ட வளர்ச்சிக்கான அனைத்து ஆதாரங்களும் சரியான அளவில் பயன்படுத்தப்படும் வகையில் உட்கட்டமைப்பு வசதி மேம்பாட்டிற்கான ஒட்டுமொத்த திட்டமிடுதலை மேற்கொள்ளவும், இடஞ்சார்ந்த திட்டமிடல் *(spatial planning)* உள்ளிட்ட பல்வேறு காரணிகளை ஒருங்கிணைத்தல் / திறம்பட செயலாக்குதல் மூலம் திட்டமிடப்பட்ட நகர்ப்புர வளர்ச்சியை நெறிமுறைப்படுத்தவும் ஏதுவாகும். நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் மறுசீரமைப்பின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டுள்ள தமிழ்நாடு அரசு, முதலமைச்சரின் ஆணையின் பேரில் ஐந்து அரசாணைகளை வெளியிட்டுள்ளது. இவ்வரசாணைகள் தமிழ்நாடு அரசின் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன. அரசு, நகரமயமாக்கலின் சவால்களை திறம்பட எதிர்கொள்ளும்வகையில், சீரான நகர்ப்புர வளர்ச்சி, செம்மையான நிருவாகம் ஆகியவற்றை உறுதிசெய்ய தேவையான இது போன்ற நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொள்ளும்' எனத் தெரிவித்துள்ளது.



# போலீஸாரின் தற்கொலைகளை தடுக்க
# ‘உளவியல்’ கணக்கீடு

## சென்னை காவல் துறை புதிய முயற்சி

போலீஸார் 24 மணிநேரமும் சுழற்சி முறையில் தொடர்ந்து பணி செய்வதால் அவர்கள் அதிகளவு மன அழுத்தத்துக்கு ஆளாகின்றனர். இதனால், காவலர்கள் பலர் மது பழக்கத்துக்கு அடிமையாவதாகவும், தற்கொலை செய்து கொள்வதாகவும் குற்றச்சாட்டு எழுந்தது. இதுபோன்ற துயரங்களை தடுக்கும் நடவடிக்கையாக ‘மகிழ்ச்சி’ என்றதிட்டம்காவல்துறையில் தொடங்கப்பட்டது.



இத்திட்டம் மூலம் தற்கொலை எண்ணம் உடையவர்கள், தொடர்ந்து பணிக்கு வராமல் இருப்பவர்கள், இணையவழி சூதாட்டத்துக்கு அடிமையானவர்கள், மன அழுத்தத்துக்கு உள்ளானவர்கள், பணியில் நாட்டமில்லாமல் இருப்பவர்கள் மற்றும் குடும்ப பிரச்சினைக்கு ஆளானவர்கள் அடையாளம் காணப்பட்டு, அவர்களுக்கு இலவச ஆலோசனை மற்றும் மருத்துவ சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது.

ஆனால், சென்னை காவல் துறையில் கடந்த 2 ஆண்டுகளில் தற்கொலை செய்து கொண்டோரின் எண்ணிக்கை 10 ஆக அதிகரித்தது. இதையடுத்து, போலீஸாரின் தற்கொலைகளை தடுக்கும் நடவடிக்கையாக சென்னை காவல்துறையின் தலைமையிட போலீஸ் அதிகாரிகள் ஆழமான மற்றும் விரிவான ஆய்வில் இறங்கினர்.

முதல் கட்டமாக ஏற்கெனவே, தற்கொலை செய்து கொண்ட போலீஸாரின் வீடுகளுக்கு நேரடியாக சென்று அவர்களின் குடும்பத்தாரிடம் பேசினர். இறுதி கட்டத்தில் தற்கொலை செய்து கொண்ட காவலர் என்ன மன நிலையில் இருந்தார்? அவரின் செயல்பாடு எப்படி இருந்தது? என்பது உட்பட பல்வேறு தகவல்களை பதிவு செய்து கொண்டனர். தமிழகம் மட்டுமல்லாமல் அண்டை மாநிலத்துக்கும் சென்று உளவியல் நிபுணர்களுடன் தற்கொலை தடுப்பு வழிமுறைகள் குறித்து ஆலோசித்தனர்.

அதை அடிப்படையாக வைத்து 20 கேள்விகள் தயார் செய்யப்பட்டது. இவை சென்னையில் உள்ள அனைத்து (சுமார் 23,000) போலீஸாருக்கும் தனித்தனியாக வழங்கப்பட்டுள்ளது. அந்த வகையில் அடிக்கடி தலைவலி வருகிறதா? நடுக்கமாகவும், இறுக்கமாகவும், கவலையாகவும் உணர்கிறீர்களா? எல்லாவற்றிலும் ஆர்வத்தை இழந்து விட்டீர்களா? மனதில் வாழ்க்கையை முடித்துக் கொள்ளும் எண்ணம் இருந்ததா? விரைவில் சோர்வடைகிறீர்களா? என்பன உட்பட 20 கேள்விகளை போலீஸாரிடம் கொடுத்து ஆம், இல்லை என பதில்கள் பெறப்பட்டு வருகிறது.

அப்படி போலீஸார் அளிக்கும் பதில்களை உளவியல் நிபுணர்கள், மன நல மருத்துவர்களுடன் ஆலோசித்து சம்பந்தப்பட்ட காவலர் தற்கொலை எண்ணத்தில் உள்ளாரா? என்பதை கண்டறிந்து அவருக்கு முன்கூட்டியே தேவையான உதவிகள் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதுகுறித்து போலீஸ் அதிகாரிகளிடம் கேட்டபோது, “காவலர்கள் அளிக்கும் பதில்கள் அடிப்படையில் ஏற்கெனவே தற்கொலை எண்ணத்தில் இருந்தாரா? தற்போது இருக்கிறாரா? தற்கொலை முடிவிலிருந்து மீண்டு வந்து விட்டாரா? என கண்டறிந்து தேவைக்கு தகுந்த சிகிச்சை அளிக்கப்படும். காவல் துறையில் தற்கொலை என்ற நிகழ்வே இருக்கக் கூடாது என்பதே இந்நடவடிக்கையின் நோக்கம்” என்றனர்.

# விசிக தவலைவர் தொல்.திருமாவளவனுடன் சந்திப்பு







விடுதலை சிறுத்தை கட்சியின் தலைவர் திரு தொல் திருமாவளவன் எம்பி அவர்களை மரியாதை நிமித்தமாக நீதியின் நுண்ணறிவு புலனாய்வு மாத இதழின் ஆசிரியர் சிவகுமார் மற்றும் பல்லாவரம் போக்குவரத்து ஆய்வாளர் திரு.மணிமாறன் மரியாதை நிமித்தமாக சந்தித்து சால்வை அணிவித்து நீதியின் நுண்ணறிவு டைரி மற்றும் காலண்டரை வழங்கிய போது. சமூகபற்றாளர் திரு. ஞானசித்தன் என்கின்ற பெயரில் வாசிப்பு, நேசிப்பு, சுவாசிப்பு என்கின்ற தொடரை எழுதி வந்தார். அந்த தொடரானது தற்போது புத்தகமாக வெளியில் வர இருக்கிறது. அந்த புத்தக வெளியீட்டு விழா சம்மந்தமாக நூல் ஆசிரியர் சிவகுமார், எழுத்தாளர் ஞானசித்தன் ஆகியோர் சந்தித்து புத்தாண்டு மற்றும் பொங்கல் வாழ்த்துக்களை தெரிவித்தனர். .

# சாலைப் பாதுகாப்பு ஆத்திச்சூடி

- அலட்சியம் தவிர்
- ஆபத்தை உணர்ந்து கொள்
- இடைஞ்சலை உண்டாக்காதே
- ஈரமான பாதையில் கவனம் கொள்
- உஷாராக வண்டியை ஓட்டு
- ஊரோடு சேர்ந்து போ
- எதிர்வரும் வாகனத்தை கவனி
- ஏடாகூடமாய் போகாதே
- ஐயமின்றி வழியை தெரிந்து கொள்
- ஒலி மாசுபாட்டை உண்டாக்காதே
- ஓய்வு எடுத்து வண்டி ஓட்டு
- ஔவை கூறியதை வாழ்வில் கடைபிடி






**பெ.மணிமாறன்.**
என்கின்ற
சமூகப்பற்றாளன் ஞானச்சித்தன்
போக்குவரத்து காவல் ஆய்வாளர்,
தாம்பரம் மாநகரக் காவல்

### பெற்றோரை பிள்ளைகள் கவனிக்காவிட்டால்

# வழங்கிய சொத்துகளின் தான பத்திரத்தை ரத்து

"வயதான காலத்தில் பிள்ளைகள்கவனிக்காவிட்டால்,பெற்றோர் வழங்கிய சொத்துகள் மீதான தான பத்திரத்தை ரத்து செய்யலாம்" என்று உச்ச நீதிமன்ற நீதிபதிகள் தீர்ப்பளித்துள்ளனர்.

மத்திய பிரதேச மாநிலத்தை சேர்ந்த வயதான பெண் ஒருவரை, அவரது மகன் சரியாக கவனிக்கவில்லை. இதையடுத்து, மகனுக்கு வழங்கிய சொத்தை மீட்டுத் தர வேண்டும். அந்த சொத்துகளுக்கான தான பத்திரப்பதிவை ரத்து செய்ய வேண்டும் என்று கோரி ம.பி. உயர் நீதிமன்றத்தில் அந்த பெண் வழக்கு தொடுத்தார். அதை விசாரித்த உயர் நீதிமன்றம், "வயதான பெற்றோரை பிள்ளைகள் கவனிக்கவில்லை என்ற காரணத்துக்காக தான பத்திரத்தை (தான செட்டில்மென்ட்) ரத்து செய்ய முடியாது. மேலும், பிள்ளைகள் கவனிக்காவிட்டால், தானப் பத்திரம் செல்லாது என்று எந்த நிபந்தனையையும் மனுதாரர் விதிக்கவில்லை. எனவே, தான பத்திரத்தை ரத்து செய்ய முடியாது" என்று கூறி வழக்கை தள்ளுபடி செய்தது.



உச்ச நீதிமன்ற நீதிபதிகள் தீர்ப்பு

இதை எதிர்த்து அந்தப் பெண் உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார். அந்த மனு மீதான விசாரணை உச்ச நீதிமன்ற நீதிபதிகள் சி.டி.ரவிக்குமார் மற்றும் சஞ்சய் கரோல் ஆகியோர் அடங்கிய அமர்வில் நடைபெற்று வந்தது. விசாரணை முடிந்து நீதிபதிகள் நேற்று அளித்த தீர்ப்பில் கூறியதாவது: ம.பி. உயர் நீதிமன்றம் சட்டத்தின்படி மட்டுமே ஆய்ந்து தீர்ப்பு வழங்கி உள்ளது. ஆனால், மூத்த குடிமக்களின் உணர்வுகளைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் உள்ளது. சொத்துகளை எழுதி கொடுத்த பிறகு பெற்றோரை பிள்ளைகள் கவனிக்காமல் போவது மிகவும் கவலை அளிக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையில், பிள்ளைகள் கவனிக்காவிட்டால் "பெற்றோர் பராமரிப்பு மற்றும் நலவாழ்வு மற்றும் மூத்த குடிமக்கள் சட்டத்தின்"படி பிள்ளைகளுக்கு பெற்றோர் எழுதி கொடுத்த சொத்து ஆவணத்தை ரத்து செய்யலாம். அந்த தான பத்திரத்தை செல்லாது என்று அறிவிக்கலாம்.

இந்தச் சட்டம் மூத்த குடிமக்களுக்கு உதவி செய்வதற்காக உள்ளது. எனவே, கூட்டுக் குடும்பத்தில் இருந்து ஒதுக்கப்படும் மூத்த குடிமக்கள் விஷயத்தில் சட்டத்தை கடுமையாக செயல்படுத்த வேண்டும் என்பதைவிட, அதில் தளர்வுகள் காட்டி சட்டத்துக்கு விளக்கம் அளிக்க வேண்டும். சொத்துகளை எழுதி வைத்தவருக்கு தேவையான அடிப்படை வசதிகள், உடல் ரீதியான தேவைகளை சொத்துகளை பெற்றவர் செய்ய வேண்டும். அப்படி செய்ய தவறினால், சொத்துகளை எழுதி கொடுத்தது செல்லாது என்று அறிவிக்க முடியும். இவ்வாறு உச்ச நீதிமன்ற நீதிபதிகள் தீர்ப்பளித்தனர்.

**திருப்பூர் மாவட்டத்தின் புதிய காவல் கண்காணிப்பாளராக திரு.யாதவ் கிரிஷ் அசோக் இ.கா.ப., அவர்கள் 02.01.2025 ஆம் தேதி பொறுப்பேற்றுக் கொண்டார்.**



# தஞ்சாவூர் மாவட்டம் அதிராம்பட்டினத்தில் கிடைக்கும் அரிய வகை மீன்கள்




கூரைக் கத்தாழை மீனின் சிறப்பம்சம் என்னவென்றால், இதிலுள்ள நெட்டி மருத்துவ குணம் கொண்டதாகும். ஆண்மை குறைவு உள்ளிட்ட பல நோய்களை குணப்படுத்தக் கூடியது.. மேலும் விலை உயர்ந்த ஒயின் தயாரிக்க கத்தாழை மீன்களை அதிகம் பயன்படுத்துவார்களாம். இதனால் வெளிநாட்டிலும் இந்த மீன்களுக்கு எப்போதுமே கிராக்கி அதிகம்.

கால்சியம் சத்து: எலும்பு தேய்மானம், சொறி சிரங்கு, நோய் எதிர்ப்பு தன்மை குறைவால் ஏற்படும் நோய்களை இந்த கத்தாழை மீன்கள் குறைக்கின்றன. இதயநோய் மற்றும் பக்கவாதம் நோய்களை முன்கூட்டியே வராமல் தடுக்க செய்கிறது. கால்சியம் எலும்பையும், பாஸ்பரஸ் பற்களை பாதுகாக்கவும் உதவுகிறது.



# விழிப்புணர்வு முகாம்

தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்பு பேரமைப்பு சென்னை அமைப்பின் 22 ஆம் ஆண்டு விழா மற்றும் நுகர்வோர் பொறுப்புகளும் கடமைகளும் குறித்த விழிப்புணர்வு முகாம். ஜனவரி 4 ஆம் தேதி சென்னை, வேப்பேரி நெடுஞ்சாலை, அருகே சால்வேஷன் ஆர்மி சமூக சேவை / HRD மையம் அரங்கத்தில் தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்புப் பேரமைப்பு சென்னை தேசிய பொதுச் செயலாளர், திரு. செ.பால்பர்ணபாஸ் அவர்கள், தலைமையில் நடைபெற்றது.

முனைவர் எஸ்பி.பெருமாள்ஜி அவர்கள், உலக தமிழ்ப் பல்கலைக் கழக இந்திய ஒருங்கிணைப்பாளர் முன்னிலையில், சிறப்பு விருந்தினர்களாக சென்னை உயர்நீதிமன்ற மேனாள் நீதியரசர் திரு.எஸ்.கே.கிருஷ்ணன் அவர்கள், தமிழ்நாடு அரசின் போக்குவரத்து ஆணையத்தின் உதவி செயலாளர் திரு. எஸ்,ஸ்ரீதரன் அவர்கள், மற்றும் சென்னை பெருநகர காவல்துறை இணையதள குற்றங்கள் பிரிவு உதவி ஆணையர் திருமிகு. கே.வி.காவ்யா அவர்கள், தமிழக அரசின் விருதுபெற்ற முதன்மை எழுத்தாளர் முனைவர் அனிதா கே.கிருஷ்ணமூர்த்தி அவர்கள், மேலும்,சென்னை பிரஸ் கிளப் பொதுச் செயலாளர் திரு.ச.விமலேஷ்வரன்





அவர்கள், மற்றும் ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனை மற்றும் மருத்துவ கல்லூரியின் முன்னாள் முதல்வர், மருத்துவர் திரு.வி.கனகசபை உள்ளிட்டோர் சிறப்புரை நிகழ்த்தினார்கள். மேலும், தமிழக அரசு உணவு பாதுகாப்புத்துறை அதிகாரிகள், தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்பு பேரமைப்பின் மாநில, மாவட்ட நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் உட்பட 300க்கும் மேற்பட்டோர் விழாவில் கலந்துக் கொண்டனர்.



# 2024 ஆம் ஆண்டு மத்திய மண்டல காவல்துறை செயல்பாடுகள்

2024 ஆம் ஆண்டு மத்திய மண்டல காவல்துறை செயல்பாடுகள்: குற்றத் தடுப்பு மற்றும் நம்பகத்தன்மை வளர்த்த நடவடிக்கைகள்

திருச்சி மத்திய மண்டல காவல்துறை சட்டம் ஒழுங்கை நிலைநாட்டும் முயற்சியில் மிகுந்த அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இம்மண்டலத்தில் பண மோசடி மற்றும் கணினிசார் குற்றங்களில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக 219 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றில் 64 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு, 5 கோடி ரூபாய் மீட்கப்பட்டுள்ளன.

மத்திய மண்டலத்தின் காவல்துறை நடவடிக்கைகள்: மத்திய மண்டல காவல்துறை தலைவர் திருச்சி மற்றும் தஞ்சாவூர் காவல்துணை தலைவர்கள் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர்களுக்கு தகுந்த அறிவுரைகளை வழங்கி வருகிறார். இதன் மூலம் சமூக விரோத செயல்களில் ஈடுபடுபவர்களை கண்டறிந்து, அவர்களுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான திட்டங்கள் அமல்படுத்தப்பட்டுள்ளன.

**முக்கிய எண்ணிக்கைகள்:**

ஆன்லைன் பண மோசடி வழக்குகள்: மொத்தம் 219 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

- திருச்சி 51
- புதுக்கோட்டை 25
- கரூர் 22
- பெரம்பலூர் 11
- அரியலூர் 15
- தஞ்சாவூர் 58
- திருவாரூர் 20
- நாகப்பட்டினம் 8
- மயிலாடுதுறை 9

**கைது செய்யப்பட்ட குற்றவாளிகள்:**

மொத்தம் 64 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் இருந்து 5,02,05,598 ரூபாய் மீட்கப்பட்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதிமன்ற உத்தரவின் கீழ் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**சமூக வலைதள குற்றங்கள்:**

வன்முறையை தூண்டும் அல்லது சமூக நல்லிணக்கத்திற்கு எதிரான பதிவுகள் தொடர்பாக 40 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 13 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

**விழிப்புணர்வு நடவடிக்கைகள்:**

கணினிசார் குற்றங்களைத் தடுக்கும் நோக்கில் பள்ளி மற்றும் கல்லூரிகளில் 3,211 விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன.

**சமூகத்தில் நம்பகத்தன்மை வளர்ப்பு:**

1930 என்ற இலவச எண்ணுக்கு பொதுமக்கள் குற்றங்கள் குறித்து புகார் அளிக்க ஊக்குவிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு, மத்திய மண்டல காவல்துறை நவீன தொழில்நுட்ப உதவியுடன் குற்றத்தை தடுக்கும் செயல்முறைகளில் முன்னேறி பொதுமக்களின் நன்மதிப்பை பெற்றுள்ளது.

# கோவையில் இடித்து தள்ளப்பட்ட 50 வீடுகள்.. 151 கட்டிடங்களை இடிக்க முடிவு

## கோவை மாநகராட்சி ஆணையாளர் அதிரடி

கோவை மாநகராட்சி வடக்கு மண்டலம் 28-வது வார்டுக்கு உட்பட்ட கணபதி வி.ஜி.ராவ் நகர் பகுதியில் 3 கிலோ மீட்டர் நீளத்திற்கு கால்வாய் அமைந்துள்ளது.இந்த கால்வாயை ஆக்கிரமித்து ஏராளமான வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

இவற்றை காலி செய்ய வேண்டும் என்று பலமுறை அறிவுறுத்தியும் அங்கிருந்தவர்கள் கேட்கவில்லை.. இதையடுத்து கால்வாயை ஆக்கிரமித்து கட்டப்பட்ட 50 வீடுகள் இடித்து அகற்றப்பட்டன. மேலும் 151 கட்டிடங்களை அப்புறப்படுத்த அதிகாரிகள் திட்டமிட்டுள்ளனர். சென்னைக்கு அடுத்தபடியாக கோவை மாநகரம் வேகமாக வளர்ந்து வருகிறது. கோவையை ஒட்டி கிராமங்களே இல்லை என்கிற அளவிற்கு அந்த பகுதியில் எல்லா ஊர்களும் கோவை மாநகரை ஒட்டி வளர்ந்துவிட்டன. கோவை மாநகரம் தற்போது 100 வார்டுகளாக உள்ள நிலையில், விரிவாக்கம் செய்யப்பட்ட பின்னர், இதன் எண்ணிக்கை கணிசமாக உயர வாய்ப்பு உள்ளது. ALSO READ " கோவையில் இறுதி வாக்காளர் பட்டியல் வெளியீடு.. மொத்தம் 31.85 லட்சம் வாக்காளர்கள் " கோவை மாநகரம் எந்த அளவிற்கு வேகமாக வளர்ந்து வருகிறதோ, அதேவேகத்தில் நிலத்தின் மதிப்பும், வீடுகளின் மதிப்பும் வளர்ந்து வருகிறது.

இதனால் ஆக்கிரமிப்புகளும் வளர்ந்து வருகிறது. ஆக்கிரமிப்புகளை தடுக்க அதிகாரிகள் கடும் நடவடிக்கைகளை எடுக்க தொடங்கி உள்ளனர். கோவை மாநகராட்சி வடக்கு மண்டலம் 28-வது வார்டுக்கு உட்பட்ட பகுதி கணபதி வி.ஜி.ராவ் நகர். இங்கு சுமார் 3 கி.மீ நீளத்துக்கு கால்வாய் இருக்கிறது. அப்படி கட்டியவர்கள பல ஆண்டுகளாக அங்கேயே வசித்து வருகின்றனர். கணபதி வி.ஜி.ராவ் நகர் காலனியில் கால்வாயை ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ள பெரும்பாலானவை ஓட்டு வீடுகள் ஆகும். இவர்கள் நீண்ட காலமாக இப்பகுதியை ஆக்கிரமித்து இருப்பதால், காலி செய்ய மறுத்துவிட்டனர்.

இதையடுத்து மாநகராட்சி நிர்வாகம் மற்றும் குடிசை மாற்று வாரியம் சார்பில் இவர்களுக்கு





கீரணத்தம் பகுதியில் அடுக்குமாடி வீடுகள் ஒதுக்கப்பட்டு, அதற்குரிய ஆணைகளும் வழங்கப் பட்டுவிட்டன. RECOMMENDED FOR YOU "“அண்ணாமலை வன்முறையை தூண்டுகிறார்”.. ‘ஊபா’ சட்டத்தின் கீழ் கைது செய்யக் கோரி பியூஸ் மனுஷ் புகார்!" அடுக்குமாடி வீடு ஒதுக்கீட்டு ஆணையை வாங்கிய பிறகும் இவர்கள் ஆக்கிரமிப்பை அகற்ற அவர்கள் முன்வரவில்லை. இந்த வீடுகளை காலி செய்யவும் இல்லை. ஆனாலும், காலி செய்யவில்லை.

இதையடுத்து கடந்த வாரம் இங்குள்ள 201 வீடுகளுக்கு மின் இணைப்பை துண்டித்தனர் ஆனாலும் வீடுகளை காலி செய்யவில்லை. இதையடுத்து கோவை மாநகராட்சி ஆணையாளர் சிவகுரு பிரபாகரன் உத்தரவின்பேரில் நகரமைப்பு அலுவலர் குமார், உதவி நகரமைப்பு அலுவலர் சத்யா ஆகியோர் தலைமையில் மாநகராட்சி ஊழியர்கள் நேற்று அதிரடியாக ஆக்கிரமிப்புகளை அகற்றும் பணியில் இறங்கினர்.பொக்லைன் எந்திரம் உதவியுடன் வீடுகள் இடித்து தரைமட்டமாக்கப்பட்டன. ஒரே நாளில் 50 வீடுகள் இடிக்கப்பட்டன. அடுத்தக்கட்டமாக மேலும் 151 வீடுகளையும் இடித்து அகற்ற மாநகராட்சி அதிகாரிகள் திட்டமிட்டிருக்கிறார்கள்.

# நாகப்பட்டினம் மாவட்ட காவல்துறை ஆய்வுகள் மற்றும் முன்னெடுப்புகள்

நாகப்பட்டினம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் A.K. அருண் கபிலன், இ.கா.ப., தலைமையில், காவல்துறையின் செயல்பாடுகள் தொடர்பான பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

**வாகன பராமரிப்பு ஆய்வு:**

மாவட்ட காவல்துறையின் ரோந்து பணிக்காக பயன்படுத்தப்படும் இரண்டு சக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்களின் நிலைமை மற்றும் பராமரிப்பு முறைகளை நேரில் ஆய்வு செய்யும் பணியில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கலந்துகொண்டார். இந்த ஆய்வு, வாகனங்களின் செயல்திறன் மற்றும் பணி பயன்பாட்டை மேம்படுத்தும் நோக்கத்துடன் நடைபெற்றது.

**மாதாந்திர ஆய்வு கூட்டம்:**

நாகப்பட்டினம் மாவட்ட காவல் அலுவலகத்தில் நடைபெற்ற மாதாந்திர ஆய்வு கூட்டத்தில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தலைமையில் முக்கிய விவாதங்கள் நடைபெற்றன.

**கூட்டத்தின் முக்கிய அம்சங்கள்:**

**வழக்குகள் மற்றும் புலன் விசாரணை:**

மாவட்டத்தில் நிலுவையில் உள்ள வழக்குகள் மற்றும் அவர்களின் முன்னேற்றம் குறித்து விரிவாக ஆய்வு செய்யப்பட்டு, வேகமாக தீர்வுகளுக்கான திட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டன.

**போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகள்:**

சாராயம், கஞ்சா, புகையிலை போன்ற போதைப்பொருட்களை கடத்தி விற்பனை செய்யும் நபர்களை கண்டறிந்து, அவர்கள் மீது கடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளுவது குறித்து திட்டமிடப்பட்டது.

**சமூக அமைதி மற்றும் ரவுடித் தொழில்கள்:**

மாவட்டத்தில் பொதுமக்களின் அமைதியை பாதிக்கும் முயற்சிகளில் ஈடுபடும் ரவுடிகள் மற்றும் குற்றவாளிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டது.

**மேலாண்மையின் உறுதி:**

காவல் கண்காணிப்பாளர் A.K. அருண் கபிலன், காவல்துறையின் செயல்திறனை மேம்படுத்தவும், சமூக அமைதியை உறுதிப்படுத்தவும் அதிகாரிகள் மற்றும் ஆளுநர்களுக்கு தெளிவான வழிகாட்டுதல்களை வழங்கினார்.

இந்த ஆய்வுகள் மற்றும் கூட்டங்களின் மூலம், நாகப்பட்டினம் மாவட்ட காவல் துறை பொதுமக்களின் நலனை பாதுகாக்கவும், சட்ட ஒழுங்கை உறுதிப்படுத்தவும் உறுதியாக செயல்படுகிறது.





# அலங்கோலமான
# ஆரம்ப சுகாதார மையம்





சென்னையில் உள்ள சாந்தோம் பகுதியில் ஆரம்ப சுகாதார மையம் ஒன்று பல வருடங்களாக செயல்பட்டு கொண்டிருக்கிறது.

அங்கு பல் மருத்துவம் மகப்பேறு மருத்துவம், குழந்தைகள் மருத்துவம் என்று பல மருத்துவ சிகிச்சை முறைகள் கையாளப்படுகிறது, மருத்துவமனைக்கு தேவையான சிறிய ஆய்வகக்கூடமும் அங்கே உள்ளன. பல லட்சம் மதிப்புள்ள மருந்து பொருட்களும் மருத்துவ உபகரணங்களும் அங்கேயே சேகரித்து வைக்கப்படுகிறது. அதன் மேற்கூறை சரியாக கட்டப்படாத காரணத்தினால் மழை நேரங்களில் மேற்கூறையில் இருந்து மழை நீர் நேரடியாக கட்டிடத்திற்குள் வந்து அங்குள்ள மருத்துவ உபகரணங்களும் மருந்து பொருட்களும் சேதம் அடையும் நிலை உருவாகியுள்ளது.

மேற்கூறையில் இருந்து கசியும் நீரால் மின்சாரம் தாக்கும் அபாயமும் காணப்படுகிறது. சேதத்தை தவிர்க்க அங்குள்ள மருத்துவர்களும் , பணியாளர்களும் இந்த பல லட்சம் மதிப்புள்ள மருந்து பொருட்களையும் , மருத்துவ உபகரணங்களையும் பாதுகாக்க வெவ்வேறு இடங்களில் வைக்கின்றன,மக்களும்மிகுந்த சிரமத்துக்குள் ஆகின்றனர். இந்த அவல நிலையை அரசு கண்டு கொள்ளுமா ?மக்களின் வரிப்பணம் காப்பாற்றப்படுமா?

# வசூல் வேட்டையில் போக்குவரத்து இன்ஸ்பெக்டர் ஹேமந்த் குமார்

சென்னை மாநகர காவலாக இருந்தபோது பீர்க்கங்கரணை போக்குவரத்து காவல் ஆய்வாளராக தொடர்ந்து மூன்று ஆண்டுகளும், கூடுவாஞ்சேரி போக்குவரத்து காவல் ஆய்வாளராக இரண்டு ஆண்டுகளும் தற்போது தாம்பரம் மாநகரம் என்று பிரிக்கப்பட்ட பிறகு மறைமலைநகர் காவல் ஆய்வாளராகஇரண்டு ஆண்டுகளும் கடந்த எட்டு வருடங்களுக்கு மேலாக தொடர்ந்து ஜிஎஸ்டி சாலையில் போக்குவரத்து காவல் ஆய்வாளராக ஹேமத்குமார் பணியாற்றி வருகிறார்.



மேலும் காவல்துறை உயர் அதிகாரிகளுக்கும், அமைச்சுப் பணியாளர்களுக்கும் பல லட்சங்கள் கொடுத்து தற்போது கிளாம்பாக்ககம் போக்குவரத்து காவல் நிலைய ஆய்வாளராக பணியிட மாற்றம் பெற்றுள்ளார். மேலும் நல்லம்பாக்கத்தில் உள்ள 200 க்கும் மேற்பட்ட கல் குவாரிகள், லாரி உரிமையாளர்கள் மற்றும் வணிக நிறுவனங்கள், கனரக வாகனங்கள் வைத்திருப்பவர்கள் , ஹோட்டல்கள், தங்கும் விடுதிகள் , பார்கள் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் தினமும் மாமூல் வசூல் செய்வதற்கு அவருக்கு கீழ் செயல்படும் போக்குவரத்து

காவலர்களை பயன்படுத்தி, வசூல் செய்து , லஞ்ச தொகையை காவல்துறை உயர் அதிகாரிகளுக்கு வழங்கி வருகிறார்.

இதன் காரணமாக அவர் மாதம் தோறும் பல லட்சங்கள் வசூலித்து வருகிறார். உயர் அதிகாரிகளுக்கு கிடைக்க வேண்டிய பணம் குறித்த நேரத்திற்குள் கொடுத்து விடுவதால், இவரை தொடர்ந்து இப்பணியில் அமர்த்தியுள்ளார்கள்.

வேறு எந்த ஆய்வாளர்களுக்கும் அந்த இடத்தை விட்டுத் தருவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது, மேலும் போக்குவரத்தை சீரமைக்க போதிய போலீசார் இல்லை. இந்நிலையில் மாமூல் வசூலிப்பதில் போலீசார் சிறப்பாக பணியாற்றி வருகிறார்கள்.


போக்குவரத்து நெரிசலை சீரமைப்பதற்கு அனுபவம் இல்லாத 50 க்கும் மேற்பட்ட ஆயுதப்படை போலீசாரை காவல்துறை உயர் அதிகாரிகளுடன் ஒத்துழைப்போடு நியமனம் செய்கின்றார் இதனால் போக்குவரத்து கடும் நெரிசல் ஏற்படுவதோடு அடிக்கடி விபத்துகளும் உயிரிழப்புகளும் ஏற்படுகின்றன.

நேர்மையும் திறமையும் உள்ள பல போக்குவரத்து காவல் ஆய்வாளர்கள் இதனால் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள் மேலும் இவரால் பாதிக்கப்பட்ட பழி வாங்கப்பட்ட பல ஆய்வாளர்கள் வெவ்வேறு இடத்திற்கு பணியிட மாற்றம் பெற்று சென்று விட்டார்கள். வசூல் வேட்டையில் இவர் சிறப்பாக செயல்பட்டு வருவதாலும் உரிய பங்கை காவல்துறை உயர் அதிகாரிகளுக்கு கொடுத்து வருவதாலும் இவரை வேறு எங்கும் மாற்றாமல் உயர் அதிகாரிகள் பார்த்து கொள்கிறார்கள்.

சுழற்சி முறையில் ஆயுதப்படைக்கு பணியிட மாற்றம் செய்யாமல் இவருக்கு நிறைய சலுகைகள் உயர் அதிகாரிகள் செய்து வருகிறார்கள் அதோடு மட்டுமல்லாமல் ஒவ்வொரு சனிக்கிழமை அன்று இவருக்கு இரவு பணி பிரத்தியமாக நியமிக்கிறார்கள், மிக முக்கிய நபர்கள் வருகையின் பொழுது சுழற்சி முறையில் அட்வான்ஸ் பைலட் பணி மற்ற ஆய்வாளர்களுக்கு தருகிறார்கள் இவர் ஒரு முறை கூட அட்வான்ஸ் பைலட் பணி இதுவரை செய்ததில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆயுதப்படை காவலர்களை போக்குவரத்து ஒழுங்கு படுத்தும் பணிக்கு ஈடுபடுத்தி விட்டு போக்குவரத்து காவலர்களை வசூல் வேட்டைக்கு ஈடுபடுத்தி வருகிறார் ஒரு நாளும் களத்தில் நின்று சாலையில் போக்குவரத்தை சீர்படுத்தி பார்த்ததே இல்லை என்பது அப்பகுதி மக்களின் குற்றச்சாட்டாக உள்ளது.

**இவரது வசூல் வேட்டைக்கு காவல்துறை உயர் அதிகாரிகள் முற்றுப்புள்ளி வைப்பார்களா??? நேர்மையும் திறமையும் உள்ள மற்ற ஆய்வாளர்களுக்கு வாய்ப்பு வழங்குவார்களா??? இல்லை பட்டா போட்டு கொடுப்பார்களா?**



**புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி**

**நர்சிங் மாணவி சௌமியா**

# கூட்டு பாலியல் சித்திரவதை படுகொலையா பின்னால் இருக்கும் வலை பின்னல்கள்?

புதுக்கோட்டை மாவட்டம் கரம்பக்குடி தாலுகா கருக்காக்குறிச்சி ராஜா குடியிருப்பை சார்ந்த ரமேஷ்- முத்துலட்சுமி இவர்களின் மூத்த மகள் R. சௌமியா இவர் புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரியில் நர்சிங் (Dmlt) மூன்றாம் ஆண்டு படித்து வருகிறார். இவர் செட்டியார் சமூகத்தை சார்ந்தவர்.இந்த ஊரில் செட்டியார் சமூகத்தை சார்ந்தவர்கள் சுமார் எட்டு குடும்பங்கள் மட்டுமே வசிக்கிறார்கள்.. இவர்கள் அனைவருக்கும் விவசாய நிலங்கள் உள்ளது விவசாய பணிகளையே செய்து வருகிறார்கள். அதேபோல் இந்த கிராமத்தில் அனைத்து சமூக மக்களும் வசித்தாலும் கள்ளர் சமூகம் மட்டுமே அதிகாரத்திலும் ,அரசியல் செல்வாக்கிலும் இருக்கிறார்கள்.

கடந்த 25-12-2024 தேதியன்று சௌமியாவின் பெற்றோர்கள் பக்கத்து ஊரான சூரக்காடு உறவினர் ஒருவர்

**சென்னை அண்ணா பல்கலைக்கழக மாணவிக்கு கிடைத்த ஆதரவு புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மாணவி சௌமியா மரணத்திற்கு கிடைக்கவில்லை? "சௌமியா தற்கொலை தான்? ஆனால் இதை வைத்து சிலர் அரசியல் செய்கிறார்கள்" என்றொரு செய்தி உலா வந்ததை கணக்கில் கொண்டு நாமலே களத்தில் இறங்கினோம்..**

துக்கத்திற்கு சென்று விட்டார்கள்.அன்று இரவு சுமார் 7 மணி அளவில் வீட்டின் முகப்பு வரண்டாவில் அமர்ந்து தான் அப்பா வாங்கி கொடுத்த சாப்பாட்டை சாப்பிட்டு கொண்டு இருந்த நிலையில் சௌமியா காணவில்லை. சாப்பிட்ட



தட்டு,போட்டு இருந்த செருப்பு, கைபேசி என அனைத்தும் அதே இடத்தில் தான் இருந்துள்ளது. சௌமியாவின் தந்தை சிறிது நேரம் கழித்து சௌமியாவிற்கு போன் பண்ணி இருக்கிறார், ஆனால் போன் மணி அடித்தாலும் சௌமியா போனை எடுத்து பேசவில்லை? உடனே அக்கம் பக்கத்திற்கு தகவல் தெரிவித்து அனைவரும் தேடிப் பார்த்திருக்கிறார்கள் சௌமியாவை எங்கேயும் காண முடியவில்லை? இரவு முழுவதும் எல்லா இடங்களிலும் தேடி இருக்கிறார்கள்? சௌமியா சடலமாக கண்டெடுக்கப்பட்ட கிணற்றிலும் லைட் அடித்து தேடி இருக்கிறார்கள்? ஆனால் அங்கும் இல்லை மறுநாள் தன் மகள் காணவில்லை என்பது தொடர்பாக வடகாடு காவல் நிலையத்தில் புகார் மனு கொடுப்பதற்காக ரமேஷ் சென்றிருக்கிறார். காவல் ஆய்வாளர் தனபால் காவல் நிலையத்தில் இல்லை.அவர் தனியாக வீடு எடுத்து தங்கி இருக்கிறார்.அந்த இடத்திற்கு சென்று ரமேஷ் புகார் மனுவை கொடுத்துவிட்டு 5000(ஐந்தாயிரம்) பணத்தையும் கொடுத்திருக்கிறார். இதை செலவுக்கு வச்சுக்கிட்டு என் மகளை வேகமா தேடி கண்டுபிடிங்க சார் என கெஞ்சி இருக்கிறார்..


அமைச்சர் ரகுபதி


வந்திதா பாண்டே IPS

காவல் துறை விசாரணையில் கள்ளர் சமூகத்தை சார்ந்த அதே ஊரில் உள்ள மணிகண்டன் என்பவரை நாங்கள் சந்தேகிக்கிறோம்? என சௌமியாவின் அப்பா திட்டவட்டமாக தெரிவித்திருக்கிறார்.26-12-2024 அன்று மாலை ரமேஷை விசாரிக்க வேண்டும் நீங்கள் உடனே காவல் நிலையத்துக்கு வர வேண்டும் என காவல் ஆய்வாளர் தனபால் அழைத்ததின் பேரில் ரமேஷ் காவல் நிலையத்திற்கு சென்று இருக்கிறார். அப்பொழுது மணிகண்டனும் காவல் நிலையத்தில் இருந்திருக்கிறார். மணிகண்டனும் காவல் ஆய்வாளர் தனபாலும் ''உன் மகள் எங்கேயாவது கிணற்றில் கிடப்பாள் நல்லா தேடிப்பார் எனஇருவரும்ஒருமித்தகுரலில் சொன்னது தான். மறுநாள் இதற்கான சந்தேகத்தை பலருக்கும்எழுப்பிஇருக்கிறது.

மறுநாள் 27-12-2024 தேதி அதிகாலையில் இரண்டு நாள் தேடிய அதே கிணற்றில் பிணமாக கிடந்தார் சௌமியா. பிறகு காவல்துறைக்கு தகவல் தெரிவித்து கரம்பக்குடி தீயணைப்புத்துறையினர் உடலை எடுத்து புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரிக்கு அனுப்பி உள்ளார்கள். சௌமியாவின் உடலை அவங்க பெற்றோர்கள் பார்ப்பதற்கும் காவல்துறையினர் அனுமதிக்கவில்லை? பிறகு மருத்துவமனைக்கு கொண்டு சென்ற பிறகு மருத்துவர்களும் உடலை பார்ப்பதற்கும் அனுமதிக்கவில்லை ? பிணவறைக்கு உடலை தூக்கி எடுக்க சென்ற உறவினர் ஒருவர் மறைமுகமாக எடுத்த போட்டோ தான் உறவினர்கள் மத்தியில் மிகப்பெரிய

சந்தேகத்தை எழுப்பி இருக்கிறது.காவல்துறை சொல்லுவது போல் இது தற்கொலை அல்ல,இது திட்டமிட்ட படுகொலை நாங்கள் உடலை வாங்க மாட்டோம்? சௌமியாவின் மரணத்தில் எங்களுக்கு சந்தேகம் உள்ளது? என் மகளை பாலியல் வன்கொடுமை செய்து படுகொலை செய்துள்ளார்கள் அவர்களை கைது செய்ய வேண்டும் என ரமேஷ் சொன்ன தகவலை அடுத்து 28-12-2024 தேதி மறுநாள் வெள்ளாஞ்செட்டியார் சங்கத்தின் சார்பாக சௌமியாவின் மரணத்திற்கு நீதி கேட்டு தஞ்சாவூர் மாநில நெடுஞ்சாலையில் ஆர்ப்பாட்டம் செய்துள்ளார்கள்.



தவ பாஞ்சாலன்



துரை குணா

இதில் திமுக கரம்பக்குடி தெற்கு ஒன்றிய செயலாளர் தவ. பாஞ்சாலனின் பங்கு என்னவென்றால்? குற்றம் சாட்டப்படும் மணிகண்டன் அவர் உடன் பங்காளி. இது படுகொலை அல்ல தற்கொலை தான் என சமாதானம் பேசி விரைந்து உடலை எடுத்துச் சென்று எரிப்பதற்கு மிகத் தீவிரம் காட்டியிருக்கிறார் தவ பாஞ்சாலன். தவ பாஞ்சாலன் நடந்து கொண்ட விதமும் செயல்பாடுகளும் அனைவருக்கும் சந்தேகத்தை மேலும் வலுப்படுத்தி இருக்கிறது? சட்டத்துறை அமைச்சர் ரகுபதி செட்டியார் சமூகமாக இருந்தாலும், தவ பாஞ்சாலன் சொல்வதை தான் அவர் கேட்பார் ஏனென்றால்? ரகுபதிக்கு லீகல்- இல்லீகள் அனைத்தையும் செய்து கொடுப்பது பாஞ்சாலன் தான் என கூறப்படுகிறது.

## இந்த விஷயத்தை நீதிமன்றத்திற்கு எடுத்துச் சென்ற துரை குணாவிடம் பேசினோம்..

**இந்த விஷயத்தை நீதிமன்றத்திற்கு எடுத்துச் சென்ற துரை குணாவிடம் பேசினோம்..**

எனது மகள் சௌமியாவை கூட்டு பாலியல் பலாத்காரம் செய்து படுகொலை செய்துள்ளார்கள்? இதை காவல்துறையும், மருத்துவ துறையும் எங்களிடம் மறைக்கிறது எங்களுக்கு உண்மை தெரிய வேண்டும் என சௌமியாவின் பெற்றோர்கள் என்னை வந்து சந்தித்தார்கள். நான் இத் தகவலை மக்கள் கண்காணிப்பாக இயக்குனரும் மூத்த வழக்கறிஞருமான தோழர் ஹேன்றி டிபன் அவர்களிடம் தகவலை தெரிவித்தேன். 02-01-2025 தேதியன்று சென்னை உயர் நீதிமன்றம் மதுரை கிளையில் மனுதாக்கல் செய்தார். இதை அவசர வழக்காக விசாரிக்க வேண்டும் என நீதிபதியிடம் கோரிக்கை வைத்தார் . மறுநாள் 03-01-2025 தேதியன்று விசாரணைக்கு வந்தது, விசாரணையில் சௌமியாவின் உடலை மறு பிரேத பரிசோதனை செய்வதற்கு ஒரு மருத்துவ குழுவை நீதிமன்றமே நியமனம் செய்தது. அதன் அடிப்படையில் 04-01-2025 தேதி அன்று உடலை மறு பிரேத பரிசோதனை செய்து உடலை பெற்றோர்களிடம் ஒப்படைத்தார்கள்.

இதில் இருக்கக்கூடிய சிக்கல்கள் என்னவென்றால், வழக்கு உயர் நீதிமன்றத்தில் இருப்பதால் நான் அது குறித்து பேசப்போவதில்லை.அப்படி பேசினால் அது சட்டத்திற்கு உகந்ததாக இருக்காது. நான் சொல்லுவது சாதாரண அடிப்படை தான். சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சர் உள்ள மாவட்டத்தில், மாவட்ட ஆட்சியர், மாவட்ட எஸ்பி, மருத்துவக் கல்லூரி முதல்வர், சௌமியாவின் உடலை உடல் கூராய்வு செய்த மருத்துவர் கார்த்திகா தேவி என அனைவரும் பெண்கள் தான். 20 -வயது மதிக்கத்தக்க தன் கல்லூரியில் நேற்று வரை படித்த சக மாணவி தற்கொலை செய்து கொண்டால் கூட ? அதை கண்டுபிடிக்கக்கூடிய பொறுப்பும், காரணமும் அவர்களுக்கு இல்லையா ? நான் புதுக்கோட்டை மருத்துவக் கல்லூரி முதல்வர் கலைவாணியிடம் பேசினேன். சௌமியாவின் அப்பா தனது மகளை கூட்டுப்

பாலியல் சித்திரவதை செய்து படுகொலை செய்துள்ளார்கள் எனத் தொடர்ந்து கூறி வருகிறார் அது தொடர்பாக ஏன் நீங்கள் சௌமியா உடலில் பாலியல் வன்புணர்வு சம்பந்தமான பரிசோதிக்கவில்லை ? எனக் கேட்டதற்கு அப்படி ஒரு ஆய்வை மேற்கொள்ள காவல் ஆய்வாளர் எங்களிடம் சொல்லவில்லை என்கிறார்? ஆக அனைத்து உடல் கூராய்வுகளும் காவல்துறை உத்தரவின் பேரில்தான் நடக்கிறதா? காவல்துறை என்ன மருத்துவம் படித்தவர்களா? அல்லது நீங்கள் காவல்துறை சொல்லும்படி வேலை செய்பவர்களா ?

இந்த வழக்கு திசை மாறியதற்கு பிஜேபி அண்ணாமலை தான் காரணம்? அண்ணாமலை தன் x வலைதளத்தில் தமிழகத்தில் சட்ட ஒழுங்கு கெட்டுப்போச்சு கருக்காக்குறிச்சி நர்சிங் கல்லூரி மாணவி சௌமியா பாலியல் பலாத்காரம் செய்து படுகொலை செய்யப்பட்டுள்ளார். என செய்தி போட்டதும்,அந்த செய்திக்கு பதில் சொல்லும் விதமாக அவசரக்கதியில் போஸ்ட்மார்ட்டம்செய்து அந்த அறிக்கையை அப்போதைய மாவட்ட எஸ்பி வந்திதா பாண்டே, மாணவி பாலியல் பலாத்காரம் செய்து கொலை செய்யப்படவில்லை என சமூக வலைதளத்தில் மாவட்ட காவல் துறை மூலம் அறிக்கை வெளியிட்டார்.

**8-அடி மட்டும் தண்ணீர் தேங்கியுள்ள 70 அடி கிணற்றில், சௌமியா விழுந்து தற்கொலை செய்து கொண்டார், அவர் உடலில் வெளி காயம், உள் காயம் ஏதுமில்லை என அறிக்கை வெளியிட்ட மருத்துவத்துறையும், மாவட்ட காவல் துறையையும் நாங்கள் ஆச்சர்யத்துடன் நம்புகிறோம். ஆனால் பாலியல் வன்புணர்வு செய்யப்பட்டதா? என்பது குறித்த பரிசோதனையை மேற்கொள்ளாமல் பாலியல் வன்புணர்வு செய்யப்படவில்லை என அதிகாரப்பூர்வமாக மாவட்ட காவல்துறை வெளியிட்ட அறிக்கை தான் ஓராயிரம் கேள்விகளை எழுப்புகிறது? வருகின்ற 23-01-2025 அன்று இந்த வழக்கு சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் விசாரணைக்கு வருகின்றது. பிறகு விரிவாக பார்ப்போம்....**




**01.01.2025. அன்று போக்குவரத்து கூடுதல் கமிஷனர் திரு .ஆர் சுதாகர் அவர்களை புத்தாண்டு வாழ்த்து தெரிவித்து மரியாதை நிமித்தமாக சந்தித்தபோது.**

# மாநில தடகள போட்டியில் வெற்றி பெற்ற பெண் உதவி ஆய்வாளரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பாராட்டி வாழ்த்து

தமிழ்நாடு முதுநிலை தடகள சங்கமும், மதுரை மாவட்ட முதுநிலை தடகள சங்கமும் இணைந்து நடத்திய 45வது மாநில அளவிலான தடகள போட்டி 2025 ஜனவரி 3ஆம் தேதி முதல் 5ஆம் தேதி வரை மதுரையில் அமைந்த ஆயுதப்படை மைதானத்தில் நடைபெற்றது.

இந்த போட்டியில், கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் பணிபுரியும் பெண் உதவி ஆய்வாளர் திருமதி. கீதா, 100 மீட்டர், 400 மீட்டர் தடை தாண்டும் மற்றும் 800 மீட்டர் ஓட்டப்பந்தயம் ஆகிய அனைத்து போட்டிகளிலும் முதன்மை பரிசுகளை வென்றார்.

பாராட்டு:

வெற்றி பெற்ற ஆற்றல்மிக்க உதவி ஆய்வாளரை 06.01.2025 அன்று, மாவட்ட காவல் அலுவலகத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர். இரா.ஸ்டாலின், இ.கா.ப. நேரில் பாராட்டி, வாழ்த்துகளை தெரிவித்தார். இந்த வெற்றி, ஆண்களுக்கான உடல்நலம் மற்றும் வீரத்துக்கான முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது, மேலும் பெண் காவல்துறையினரின் திறன் மற்றும் முயற்சியையும் காட்டுகிறது.







Owned, Published And Printed By **R.SIVAKUMAR** Printed At **CHENNAI OFFSET PRINTERS**, 19/1, 21/2, Kitabathkhan Bhandur Street, Ellis Road, Chennai - 600002. Published From No.14/88, 3rd Main Road, Venkateswara Nagar, Velachery, Chennai - 600042 Editor: **R.SIVAKUMAR**


GEESYS
Solar AC Combiner Box
"சூரிய சக்திக்கு துணை
நிற்கும் நம்பிக்கை -
GEESYS SOLAR AC
COMBINER BOX!
Features
Safety and Protection
UV-Resistant Enclosure
Easy Maintenance
IP-Rated Enclosure
Efficient Wiring Management
DANGER
FEW OF OUR PRODUCT RANGE
SOLAR ACDB
FIRE FIGHTING PANEL
MOTOR STARTERS
APFC
SOLAR DCDB
UPS & STABILIZERS
Redington SOLAR
Vashi
IRO
GEESYSINDIA.COM
9962012354
INFO@GEESYSINDIA.COM













▶ சென்னை கிண்டியில் உள்ள ஆர் வீ டவரில் நீதியின் நுண்ணறிவு புலனாய்வு மாத இதழின் ஐந்தாம் ஆண்டு துவக்க விழா மற்றும் பயிற்சி வகுப்பு மிகவும் சிறப்பாக நடத்தது. இந்த விழாவில் சென்னை பிரஸ் கிளப் தலைவர் அ செல்வராஜ் குத்துவிளக்கு ஏற்றி நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார்.பொதுச் செயலாளர் விமனேஸ்வரன் ஐந்தாம் ஆண்டு இதழை வெளியிட்டார் துணைத் தலைவர் காதர் உசேன் இதழைப் பெற்றுக் கொண்டார்.மற்றும் சென்னை பிரஸ் கிளப் மூத்த உறுப்பினர்கள். எம். எஸ் .எம். இ .இணை இயக்குனர் சுரேஷ் பாபுஜி,நீதியின் நுண்ணறிவு புலனாய்வு மாத இதழின் நிருபர்களுக்கு 2025 ஆண்டு அடையாள அட்டை வழங்கினார். அனைத்திந்திய பத்தரிகைஆசிரியர் மற்றும் வெளியீட்டாளர் சங்கம் தலைவர் எஸ். ராஜேந்திரன், நினைவு பரிசை வழங்கினார். தலைமைச் செயலக அனைத்து பத்திரிகையாளர் சங்கம் தலைவர் கா .குமார் மற்றும் தலைவர் ஆல் இந்தியா பிரஸ் மீடியா அசோசியேஷன். வேல்முருகன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மற்றும் இந்த விழாவில் மூத்த பத்திரிக்கையாளர் வி .எஸ் ராமன், நாற்காலி செய்தி ஆசிரியர் கார்த்திகேயன், அரசியல் முத்திரை ஆசிரியர் செல்வம்,தேனைப் பார்வை ஆசிரியர் சரண்குமார், ஆரம்பம் ஆசிரியர் ராமச்சந்திரன்,மற்றும் சென்னை பிரஸ் கிளப்பின் பொருளாளர், நிர்வாகிகள் மற்றும் கலந்து கொண்ட அனைவருக்கும் நீதியின் நுண்ணறிவு புலனாய்வு மாத இதழ் சார்பில் ஆசிரியர் சிவாகுமார், நெஞ்சார்ந்த நன்றிகள் தெரிவித்தார்